மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

காடயாம்பட்டி பஞ்சாயத்து ஒன்றியம் தொழில் துறையில் பின்தங்கிய பகுதியாக அறிவிக்கப்பட்டபின் தொடங்கப்பட்ட தொழிற்சாலைகளினுடைய எண்ணிக்கை 22.

திரு. ஆர்.ஆர். சேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்நிய நாட்டு முதலீட்டுடன் தொடங்கப்படக்கூடிய பெரிய தொழிற்சாலைகள், குறிப்பாக ஹூண்டாய், ஃபோர்டு, போன்ற தொழிற்சாலைகள் எல்லாம் சென்னையைச் சுற்றியே தொடங்கப்படுகின்றன. ஏற்கெனவே ஜனநெருக்கடி மிகுந்த சென்னைக்கு இது மேலும் அதிக சிக்கலை தோற்றுவிக்கக்கூடும். எங்களுடைய ஓமலூர் தொகுதி, தேசிய நெடுஞ்சாலையிலே உள்ளது. தென் மாவட்டங்களை வடமாநிலங்களோடு இணைக்கும் இணைப்புச் சாலையாக இருக்கின்றது. அதுமட்டுமல்ல, அங்கே விமான நிலையமும் இருக்கிறது. அதுமட்டுமல்ல, ஏராளமான மனித சக்தியும் அங்கே கிடைக்கின்றது. இவற்றையெல்லாம் கருத்தில்கொண்டு ஒரு பெரிய தொழிற்சாலையை அந்தப் பகுதியிலே தொடங்க அரசு முன்வருமா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, காடயாம்பட்டியிலே பெரிய தொழிற்சாலையைக் கொண்டு வருவதற்கான வசதி வாய்ப்புகள் இல்லை. மாவட்டத்தைப் பொறுத்தவரையில், பெரிய தொழிற்சாலையைக் கொண்டு வருவதற்கான வசதி வாய்ப்புகளை எண்ணிப் பார்த்து அரசு அது குறித்துப் பரிசீலனை செய்யும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 142, திரு. கு. மனோகரன், மாண்புமிகு கல்வி அமைச்சர்.

142—

கலைக் கல்லூரியில் கணினி படிப்புகள்

***30249—திரு. கு. மனோகரன்:**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

2000 மார்ச் 30]

தருமபுரி அரசினர் கலைக் கல்லூரியில் பி.சி.ஏ. மற்றும் எம்.சி.ஏ. போன்ற படிப்புகளை வரும் கல்வியாண்டில் தொடங்கிட அரசு முன்வருமா?

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.

திரு. கு. மனோகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இல்லை என்ற சொல்லே இருக்கக்கூடாது என்று தமிழக அரசு பாடுபட்டுக் கொண்டிருக்கும் இந்த நல்ல வேளையிலே, தருமபுரி அரசு கலைக் கல்லூரியில் எம்.சி.ஏ. பாடப் பிரிவை வழங்க முடியாவிட்டாலும், தபால் வழியாகப் பயின்றுவரும் எம்.ஏ. பாடப் பிரிவை Regular Course ஆக ஆக்குவதோடு, Regular Course ஆக *25* இருக்கைகள் மட்டுமே அனுமதிக்கப்பட்டு, இன்றைக்கு மாணவர்களிடையே பெரும் வரவேற்பைப் பெற்றுள்ள B.Sc. Computer Science-ஐ மாலை நேர சுயநிதி அடிப்படையில் நடத்திக்கொள்ள மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தருமபுரி அரசு கலைக் கல்லூரியில் *1998-99*-ஆம் ஆண்டு முதல் பி.எஸ்.சி. கணிப்பொறி அறிவியல் பாடம் தொடங்கப்பட்டு நடைபெறுகிறது. கணிப்பொறி அறிவியல் வகுப்பு ஒன்று, *10* கல்லூரிகளுக்கு வழங்கப்பட்டு தருமபுரிக்கும் வழங்கப்பட்டிருக்கிறது. தபால் வழி பாடத் திட்டம் என்பதைக் கல்லூரிகளிலே நடைமுறைப்படுத்துவதற்கு வாய்ப்புக் கிடையாது. மாலை நேரக் கல்லூரி என்பது அந்த ஆசிரியர்களுக்கு நிர்ணயிக்கப்பட்ட நேரத்தில் போதுமான அளவுக்கு மிச்சம் இருக்குமானால், அதிலே படிப்பதற்கு மாணவர்கள் இருப்பார்களேயானால் அதுபற்றிப் பரிசீலிக்கலாம்; உறுதி தரமுடியாது.

திரு. கு. மனோகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்ற ஆண்டு *25* இருக்கைகள் அனுமதிக்கப்பட்டு B.Sc. Computer Science நடைபெற்று வருகிறது. தருமபுரி மாவட்டம் பொருளாதாரத் துறையிலும், கல்வித் துறையிலும் ஒரு பின்தங்கிய மாவட்டம்.

மாணவர்கள் இப்போது கணினிப் படிப்பை படிக்க அதிக அளவில் முன்வருவதால் தருமபுரி அரசு கலைக் கல்லூரிக்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மறுபரிசீலனை செய்து கம்ப்யூட்டர் படிப்பை மாலை நேர சுயநிதி வகுப்புகளாக நடத்த மீண்டும் மறுபரிசீலனை செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதுபற்றித்தான் பரிசீலிக்க வேண்டுமென்று நான் காரணம் சொன்னேன். ஒன்று, கணிப்பொறித் துறையிலே உள்ள ஆசிரியர்களால் அந்த வகுப்புகளை நடத்தக்கூடிய வாய்ப்பு இருக்க வேண்டும். இரண்டாவது, சுயநிதி வகுப்புகளாக தனியாக வகுப்புகளைத் தொடங்குவதைப் பல்கலைக்கழகம் அதனுடைய கொள்கை முடிவின்படி ஏற்றுக்கொள்ளவில்லை. எனவே, பல்கலைக்கழகத்தோடு மாறுபட்டு சுயநிதி வகுப்புகளை மிக அதிகமாகத் தொடங்குவது என்பது அவ்வளவு முறையும் அல்ல. ஆகவே, அதுபற்றிப் பரிசீலிக்கப்படும்.

முற்பகல் *9-35*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 143, திரு. ரா. ஈஸ்வரன், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.

143—

கிளை மின் நிலையம் அமைத்தல்

***28845—திரு. ரா. ஈஸ்வரன்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வாசுதேவநல்லூர் தொகுதி, சிவகிரி நகரில் புதிய கிளை மின் நிலையம் அமைக்க அரசு உத்தரவிட்டும் வேலை நடைபெறவில்லை என்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், விரைவாக வேலையைத் தொடங்க அரசு முன்வருமா?